# <u>அவசர கூட்டப்பொருட்கள்</u>

1. இம்மாநகராட்சிக்கு புதிய அலுவலக கட்டிடம் பாலமோர் சாலையில் உள்ள மாநகராட்சிக்கு சொந்தமான கலைவாணர் கலையரங்க கட்டிடத்தினை இடித்து அப்பகுதியில் புதிய அலுவலக கட்டிடம் கட்டுவதற்கு மூலதன மானியம் / இயக்குதல் மற்றும் பராமரிப்பு இடைவெளி நிரப்புதல் நிதி (CGF/O&M Gap filling fund) 2017-2018-ன் கீழ் ரூ.5.00 கோடி மதிப்பீட்டிற்கு நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்கள் கடிதம் எண்.15040/2017/இ1, நாள்.13.04.2018 -ன் படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு தற்போது கட்டிட பணிகள் நிறைவடையும் தருவாயில் உள்ளது.

01.03.2019 முதல் நாகர்கோவில் நகராட்சியினை மாநகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டதால் மாமன்றத்திற்கு தகுந்தவாறு கட்டிட வடிவமைப்பில் மாறுதல் செய்து மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் மண்டல அலுவலர்கள் அலுவலகங்கள் அமைக்கும் விதமாக கூடுதல் தளம் மற்றும் உயர் மட்ட கூரை (High Roof), அணுகு சாலை (Bridge) மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் (infrastructure) செய்திடவும் ரூ.5.50 கோடிக்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. அதில் மேற்படி அலுவலக கட்டிடத்தில் அத்தியாவசிய பணிகளை மேற்கொண்டு பயன்பாட்டிற்கு கொண்டு வரும் விதமாக ரூ.2.50 கோடி மாநகராட்சி பொது நிதியில் ஈடு செய்யவும், மீதம் உள்ள ரூ.3.00 கோடியினை இயக்குதல் மற்றும் பராமரிப்பு இடைவெளி நிரப்புதல் நிதி, அல்லது வேறு ஏதாவது நிதியில் 2020-2021-ம் நிதியாண்டு அல்லது அடுத்தடுத்த நிதியாண்டிலோ அரசு மானியமாக பெற்றும் ரூ.5.50 கோடிக்கு புதிய அலுவலக கட்டிடத்திற்கு கூடுதல் பணிகள் செய்திட மன்றத்தின் அங்கீகாரத்திற்கு.

<u>அலுவலக குறிப்பு</u>- அங்கீகரிக்கலாம்.

கோப்பு எண்.1642/2020/இ1

**தீர்மானம் எண்.578 – அங்கீகரிக்கப்பட்டது**

2. இம்மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் சிறப்பு சாலைகள் திட்டம் 2020-2021-ன் கீழ் ரூ.10.00 கோடி மதிப்பீட்டில் சாலை பணிகளை மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கும் பொருட்டு மன்ற தீர்மானம் நிறைவேற்றி அனுப்பி வைக்குமாறு நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.20557/2020/இ3, நாள்.11.12.2020-ல் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் கீழ்கண்டவாறு நிதி ஒதுக்கீடு செய்த விபரம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

| மாநகராட்சியின் பெயர் | மதிப்பீட்டு தொகை (ரூ.பட்டியல்) | சிறப்பு சாலைகள் திட்டமானிய நிதி (ரூ.கோடியில்) | மாநகராட்சி பங்களிப்பு (ரூ.கோடியில்) |
|---|---|---|---|
| நாகர்கோவில் | 10.00 | 9.00 | 1.00 |

மேற்படி நிதி ஒதுக்கீட்டின் அடிப்படையில் கீழ்கண்டவாறு தேர்வு செய்யப்பட்ட பணிகளை, நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களிடம் நிர்வாக அனுமதி பெற்று பணி செய்யவும் மன்றத்தின் அங்கீகாரத்திற்கு.

| வ. எண் | வேலையின் பெயர் | சாலையின் நீளம் (கி.மீ) | சாலையின் அகலம் (மீ) | மதிப்பீடு (ரூ.லட்சத்தில்) |
|---|---|---|---|---|
| 1 | இம்மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.1 ஆசிர்வாதம் நகர் மற்றும் இடையன்விளை சாலை, வார்டு எண்.43 பெஞ்சமின் தெரு, சைமன் நகர் சாலை, வார்டு எண்.44 கேசரி தெரு, வார்டு எண்.51 ஏ.ஆர்.கேம்ப் முதல் குருசடி சாலை வார்டு எண்.44 ஏசுவடியான் சாலை தார்தளம் அமைத்தல் மற்றும் வார்டு எண்.13, கம்போளம் தெருவில் பேவர் பிளாக் சாலை அமைத்தல் பணி | 4.250 | 4.50 | 239.00 |
| 2 | இம்மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.9 &10 அவ்வை சண்முகம் சாலை, வார்டு எண்.40, வட்டகரை சாலை, வார்டு எண்.20CTM புரம் மெயின் சாலை, வார்டு எண்.22 எறும்புகாடு கோகிலான் விளை சாலை மற்றும் வார்டு எண்.19 கச்சேரி சாலை ஆகிய பகுதிகளில் தார்தளம் அமைத்தல் பணி | 4.210 | 5.80 | 266.00 |

| | | | | |
|---|---|---|---|---|
| 3 | இம்மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.3 அம்மன்கோவில் சாலை, வார்டு எண்.6 & 29 CBH Road (VAO Office முதல் CBH வரை) வார்டு எண்.31, ஓட்டுபுறை தெரு மற்றும் வார்டு எண்.23, இந்திரா தெரு வார்டு எண்.52, அசோக் அவென்யூ ஆகிய பகுதிகளில் தார்தளம் அமைக்கும் பணி | 4.180 | 4.50 | 242.50 |
| 4 | இம்மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.52 சற்குணவீதி மற்றும் சிதம்பரநாதன் தெரு, வார்டு எண்.46 வாட்டர் டேங்க் ரோடு, வார்டு எண்.43 & 51 SP Camp Office சாலை ஆகிய பகுதிகளில் தார்தளம் அமைத்தல் மற்றும் வார்டு எண்.27 தேவசகாயம் தெரு மற்றும் வார்டு எண்.31, சார்லஸ் மில்லர் தெருவில் பேவர்பிளாக் அமைக்கும் பணி | 3.675 | 5.50 | 252.50 |
| | **மொத்தம்** | **16.315** | | **1000.00** |

<u>அலுவலக குறிப்பு</u> – மன்றம் அங்கீகரிக்கலாம்.

கோப்பு எண்.10146/2020/இ3

**தீர்மானம் எண்.579 – அங்கீகரிக்கப்பட்டது**